# STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# திருத்தங்களுடன் 3 குற்றவியல் சட்ட மசோதாக்கள்

## மக்களவையில் தாக்கல்

**புது தில்லி, டிச. 12:** குற்றவியல் சட்டங்களுக்கு மாற்றாக ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட 3 மசோதாக்களை திரும்பப் பெற்ற மத்திய அரசு, திருத்தங்களுடன் புதிய மசோதாக்களை மக்களவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்தது.


இந்த மசோதாக்கள் மீதான விவாதம் வியாழக்கிழமை (டிச. 14) நடைபெறுகிறது.

'பாரதிய நியாய சம்ஹிதா', 'பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா', 'பாரதிய சாட்சிய அதினியம்' ஆகிய 3 புதிய மசோதாக்களை நாடாளுமன்றத்தில் மத்திய அரசு கடந்த ஆகஸ்ட் மாதம் அறிமுகம் செய்தது. இந்திய தண்டனைச் சட்டம் 1860, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1898, இந்திய சாட்சிய சட்டம் 1872 ஆகிய ஆங்கிலேயர் ஆட்சிக் கால சட்டங்களுக்கு மாற்றாக அந்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மசோதாக்களை வாபஸ் பெற்ற மத்திய அரசு, அவற்றுக்குப் பதிலாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட புதிய மசோதாக்களை மக்களவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்தது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்ததாவது: மூன்று மசோதாக்கள் தொடர்பாக மத்திய உள்துறை அதிகாரிகள், மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அதிகாரிகள், துறை நிபுணர்கள் உள்ளிட்டோருடன் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற நிலைக் குழு பல சுற்றுகளாக ஆலோசனை மேற்கொண்டது.

அதன் பின்னர் மசோதாக்களில் சில திருத்தங்களை அந்தக் குழு பரிந்துரைத்தது. இதையடுத்து ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட மசோதாக்கள் திரும்பப் பெறப்பட்டு, நாடாளுமன்ற நிலைக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் திருத்தங்களுடன் புதிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



மக்களவையில் புதிய குற்றவியல் சட்ட மசோதாக்களை செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்து பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

குடிமக்களுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் இந்தப் புதிய சட்ட மசோதாக்கள் இருக்கும்.

இந்த மசோதாக்கள் மீதான விவாதம் வியாழக்கிழமையும் (டிச. 14), வாக்கெடுப்பு வெள்ளிக்கிழமையும் (டிச. 15) நடைபெறும் என்றார்.

மூன்று மசோதாக்கள் மீது விவாதம் நடத்த 12 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்தார்.

**குறைந்தபட்சம் 5 திருத்தங்கள்:** புதிதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 'பாரதிய நியாய சம்ஹிதா' மசோதாவில், 'பயங்கரவாதம்' என்றால் என்ன என்பதற்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில் 'பொருளாதாரப் பாதுகாப்பு' என்ற சொல்லும் சேர்க்கப்பட்டுள்ளது.

அதாவது நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை, பாதுகாப்பு, பொருளாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுவது, இந்தியா அல்லது வேறு எந்தவொரு நாட்டிலும் தாக்குதல் நடத்தும் நோக்கம் கொண்டிருப்பது அல்லது தாக்குதல் நடத்துவது பயங்கரவாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல், பாலியல் வன்கொடுமை அல்லது அது போன்ற குற்றங்களால் பாதிக்கப்படுவோரின் அடையாளத்தை வெளியிடக்கூடிய வகையில், நீதிமன்ற விசாரணைகள் குறித்த தகவலை அச்சிட்டாலோ, வெளியிட்டாலோ அபராதத்துடன் சிறைத் தண்டனை விதிக்க மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்தச் சிறைத் தண்டனை 2 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்.

புதிதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மசோதாக்களில் குறைந்தபட்சம் 5 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னதாக, இந்த மூன்று மசோதாக்கள் கடந்த ஆகஸ்ட் 11-ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டன. அந்த மசோதாக்களை நிலைக் குழு ஆய்வுக்கு அனுப்புமாறு மக்களவைத் தலைவரிடம் உள்துறை அமைச்சர் அமித் ஷா வலியுறுத்தினார். தொடர்ந்து, மாநிலங்களவைத் தலைவர் ஜகதீப் தன்கரும் நிலைக் குழு ஆய்வுக்குப் பரிந்துரை செய்தார்.

# புயல் பாதிப்பு: சென்னையில் மத்திய குழு ஆய்வு

**சென்னை, டிச. 12:** மிக்ஜம் புயல் மழையால் சென்னையில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு குறித்து, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையிலான மத்திய குழுவினர் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தனர்.

மிக்ஜம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டது. அனைத்துப் பகுதிகளிலும் தண்ணீர் பெருக்கெடுத்தோடி பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது.

தமிழக அரசு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன், மத்திய அரசிடம் நிவாரணத் தொகையை ரூ. 5,060 கோடி கேட்டுள்ளது.

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய இணையமைச்சர் எல்.முருகன் ஆகியோர் தமிழகம் வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். மத்திய அரசின் சார்பில் மாநில பேரிடர் நிதியிலிருந்து 2-ஆம் கட்டத் தொகை ரூ.450 கோடி விடுவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையிலான மத்திய குழுவினர் திங்கள்கிழமை இரவு சென்னை வந்தனர். குழுவில் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சக அதிகாரி திமான் சிங், மத்திய மின்துறை இணை இயக்குநர் ரங்கநாத் ஆதம், மத்திய அரசின் வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலன் துறை இணை இயக்குநர் ஏ.கே.சிவ்ஹரே, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் விஜயகுமார் மற்றும் பவ்யா பாண்டே இடம்பெற்றிருந்தனர்.

**தலைமைச் செயலருடன் ஆலோசனை:** இந்தக் குழுவினர் சென்னை தலைமைச் செயலகத்துக்கு செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வந்தனர். தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகளுடன் மத்திய குழுவினர் ஆலோசனை நடத்தினர். அப்போது 4 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு குறித்து விடியோ மற்றும் புகைப்படங்கள் மூலம் விளக்கப்பட்டது.





மிக்ஜம் புயல் வெள்ளச் சேதங்களை சென்னை வேளச்சேரியில் ஆய்வு செய்த தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையிலான குழுவினர். உடன், தென் சென்னை எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்டோர்.

அதைத் தொடர்ந்து, குழுவினர் இரு பிரிவுகளாக, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர்.

வடசென்னைக்குச் சென்ற குழுவினர் பெரியமேடு, புளியந்தோப்பு டிமலஸ் சாலையிலிருந்து ஆய்வைத் தொடங்கினர். பட்டாளம், வியாசர்பாடி, வடபெரும்பாக்கம், மீஞ்சூர், மணலி, திருவொற்றியூர், பழவேற்காடு பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டனர்.

தென்சென்னைக்குச் சென்ற குழுவினர் வேளச்சேரி, மடிப்பாக்கம், பெரும்பாக்கம், பள்ளிக்கரணை, மேடவாக்கம் உள்ளிட்ட பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டனர்.

மத்திய குழுவினருடன் சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் ககன் தீப் சிங் பேடி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் கார்த்திகேயன் உள்பட பல்வேறு துறையின் அதிகாரிகளும் சென்றனர்.

## தமிழக அரசுக்குப் பாராட்டு

புயல் பாதிப்புகளை ஆய்வு செய்த பிறகு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய ஆலோசகர் குணால் சத்யார்த்தி கூறியதாவது:

பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் உத்தரவின்பேரில் இந்த ஆய்வை மேற்கொள்கிறோம். புயலாலும், வெள்ளத்தாலும் சென்னை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை மற்றும் மீட்புப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளதற்காக தமிழக அரசுக்கு எங்களுடைய பாராட்டுகள். உயிரிழப்புகள் குறைக்கப்பட்டுள்ளன. 2015-ஆம் ஆண்டு வெள்ள காலத்தைவிட, தற்போது அடிப்படை கட்டமைப்புகள் மேம்பட்டதாகவே உள்ளது.

விமான நிலையம் விரைவாக செயல்பாட்டுக்கு வந்தது. தொலைத்தொடர்பு சேவைகள் விரைவாக சரிசெய்யப்பட்டன. அரசு பொறுப்புடன் விரைவாகச் செயல்பட்டுள்ளது. வெள்ள பாதிப்புகள் குறித்து மத்திய அரசிடம் தெரிவித்து, தமிழக அரசு கோரியவற்றை விரைவாக வழங்கக் கேட்டுக்கொள்வோம்.

மழை வெள்ளம் அதிகம் இருந்ததால் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது. டிசம்பர் 3-இல் கனமழை அதிக அளவில் இருந்தது. சென்னையில் உள்ள கட்டமைப்பானது வெள்ள நீர் உடனே கடலை அடைய முடியாத வகையில் உள்ளது. இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றார்.

எண்ணூர் நெட்டுக்குப்பம் முகத்துவாரத்தில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவு பாதிப்பு, பழவேற்காடு பகுதியில் படகுகள் சேதமடைந்து மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. சாலைகள் சேதமடைந்தது குறித்தும் மத்தியக் குழுவினரிடம் விளக்கப்பட்டது.

**இரண்டாம் நாளாக...** மத்திய குழுவினர் தாம்பரம் உள்பட பல்வேறு பகுதிகளில் இரண்டாம் நாளாக புதன்கிழமை (டிச. 13) ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

இந்த ஆய்வுக்குப் பிறகு தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை வியாழக்கிழமை (டிச. 14) மத்திய குழுவினர் சந்திக்க உள்ளனர்.

EVA STALIN

**5ஜி நெட்வொர்க் சேவை**

## சென்னை ஐஐடி– தேஜஸ் நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

**சென்னை, டிச. 12:** சென்னை ஐஐடி கண்டறிந்த 5ஜி தொழில்நுட்பத்தை தேஜஸ் நிறுவனம் பயன்படுத்த ரூ. 12 கோடிக்கு ஒப்பந்தம் செய்து உரிமம் வழங்கியுள்ளது.

சென்னை ஐஐடி இந்தியாவின் ஊரகப் பகுதியில் குறைந்த செலவில் 5ஜி நெட்வொர்க் சேவை தொடர்பை சிறந்த முறையில் அளிப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டது. ஊரகப் பகுதி தகவல் தொழில்நுட்பத் தொடர்புக்கு 5ஜி அடிப்படை நிலையத்தை குறைந்த செலவில் உருவாக்குவது இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிலையில், சென்னை ஐஐடி கண்டறிந்த 5ஜி நெட்வொர்க் தொழில்நுட்பத்தை தேஜஸ் நெட்வொர்க் நிறுவனம் பயன்படுத்திக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி மற்றும் முன்னாள் ஐஐடி இயக்குநர் பாஸ்கர் ராமமூர்த்தி ஆகியோருடன் தேஜாஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் குமார் சிவராஞ்சன் ஒப்பந்தம் மேற்கொண்டார்.

இந்த தொழில்நுட்ப சேவையை பயன்படுத்திக் கொள்வதற்காக சென்னை ஐஐடி ஆராய்ச்சி நிறுவனத்துக்கு ரூ.12 கோடி உரிமத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஐஐடி இயக்குநர் காமகோடி, முன்னாள் இயக்குநர் பாஸ்கர் ராமமூர்த்தி ஆகியோர் கூறுகையில், இந்தியாவைச் சார்ந்த தேஜஸ் நெட்வொர்க் நிறுவனத்துக்கு முதன் முதலாக ஒரு 5ஜி நெட்வொர்க் சேவை வழங்குவதற்குரிய ஒப்பந்தம் கிடைத்துள்ளது.

பிஎஸ்என்எல் நிறுவனத்துடன் இணைந்து தேஜஸ் நிறுவனம் செயல்படவுள்ளது.

தேஜஸ் நெட்வொர்க் நிறுவனத்துக்கு ரேடியோ அக்சஸ் நெட்வொர்க் தொழில்நுட்பத்தை அளித்துள்ளோம்.

அடுத்து பிஎஸ்என்எல் நிறுவனம் 5ஜி தொழில்நுட்பத்தை செயல்படுத்தும்போது, நாம் அளித்த 5ஜி தொழில்நுட்பம் வரும் என எதிர்பார்க்கிறோம்.

இந்தியாவில் முதல்முறையாக உள்நாட்டு நிறுவனம் நெட்வொர்க்கை மேம்படுத்துவது இதுதான் முதல்முறை. 5ஜி நெட்வொர்க் அதிவேகமாக கிடைப்பதற்காக மைமோ என்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உள்ளோம்.

இதைத் தொடர்ந்து 6ஜி நெட்வொர்க்கை மேம்படுத்துவதற்கான பணிகளையும் தொடங்கியுள்ளோம் என அவர்கள் தெரிவித்தனர்.

## மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துக்கு தேசிய விருது

**சென்னை, டிச. 12:** தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துக்கு சிறந்த செயல்பாட்டுக்கான தேசிய விருதை மத்திய அரசு வழங்கியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மிக்ஜம் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய மருத்துவர்கள் மற்றும் கூட்டுறவு மருந்து நிலையம் பண்டகசாலை எனும் இம்ப்காப்ஸ் நிறுவனத்தின் சார்பில் நிலவேம்புக் குடிநீர் மற்றும் நிலவேம்புக் குடிநீர் பாக்கெட்டுகளை 50 ஆட்டோக்கள் மூலம் விநியோகிக்கும் சேவையை சைதாப்பேட்டையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செவ்வாய்க்கிழமை தொடக்கி வைத்தார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர் மைதிலி கே.ராஜேந்திரன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத் திட்ட இயக்குநர் ஹரிஹரன், மண்டலக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, இம்ப்காப்ஸ் மருத்துவர்கள் கவ்லைன், காதர் முகைதீன், சுரேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இம்ப்காப்ஸ் நிறுவனத்தின் சார்பில் 50 ஆட்டோக்கள் மூலம் சென்னை முழுவதும் நிலவேம்பு குடிநீர் விநியோகத்திற்கான சேவையை செவ்வாய்க்கிழமை கொடியசைத்து தொடங்கி வைத்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

அப்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியது:

இம்ப்காப்ஸ் நிறுவனம் சார்பில் புயல் மற்றும் வெள்ள பாதிப்புகளுக்குள்ளான மக்களுக்கு உதவுகின்ற வகையில் 50 ஆட்டோக்களில் இலவச நிலவேம்புக் குடிநீர் பாக்கெட்டுகளும், நிலவேம்புக் குடிநீரும் விநியோகிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் தொடங்கப்பட்ட 1994-ஆம் ஆண்டு முதல் தற்போது அதன் செயல்பாடுகள் என்பது அனைவராலும் கூர்ந்து கவனிக்கும் ஒன்றாக இருக்கின்றது. அந்த அமைப்பின் சார்பில் ஹெச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தடுக்கும் சேவைகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

தொடங்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை மத்திய அரசின் சார்பில் பல்வேறு விருதுகளை அந்தச் சங்கம் பெற்றுள்ளது. அதன் தொடர்ச்சியாக இம்முறை, மத்திய அரசின் சார்பில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துக்கு சிறந்த செயல்பாட்டுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

STALIN IAS ACADEMY

# பின்னடைவுகளுக்கு நடுவிலும்...

வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் இன்றைய பொருளாதார நிலைமை பலருக்கும் வியப்பை ஏற்படுத்துகிறது. உலகளாவிய பொருளாதார தேக்க நிலைக்கு நடுவில், சர்வதேச நிதி மேலாண்மை அமைப்புகள் இந்தியாவை கலங்கரைவிளக்கமாகப் பார்க்கின்றன.

இந்திய ரிசர்வ் வங்கி தன்னுடைய வட்டி விகிதத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதாக இல்லை என்று அறிவித்திருக்கிறது. 2023-24- க்கான ஜிடிபி வளர்ச்சி 7%-ஆக இருக்கும் என்று தெரிவித்திருக்கிறது. நிகழ் நிதியாண்டின் இப்போதைய மூன்றாவது காலாண்டில் 6.5%, நான்காவது காலாண்டில் 6% அளவிலும், அடுத்த நிதியாண்டின் (2024-25) மூன்று காலாண்டுகளில் 6.7%, 6.5%, 6.4% என்ற அளவிலும் அதிகரிக்கும் என ரிசர்வ் வங்கி மதிப்பிட்டுள்ளது.

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் உற்சாகமும் விறுவிறுப்பும் காணப்படுகின்றன. உற்பத்தித் துறை 13.9%, கட்டுமானத் துறை 13.3% அளவில் வளர்ச்சியை எட்டியிருக்கின்றன. உற்பத்தித் துறை, கட்டுமானத் துறைகளின் வளர்ச்சியால் படிப்படியாக ஊரகப் பொருளாதாரத்தின் வளர்ச்சி, நுகர்வோரின் தேவைகள் ஆகியவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வங்கிகள், கார்ப்பரேட் நிறுவனங்களின் வருடாந்திர வரவு-செலவு அறிக்கைகள் வலுவாக இருக்கின்றன. துணைக் களப் பொருள்கள் (சப்ளை செயின்) இயல்பு நிலைக்குத் திரும்புவதன் காரணமாக, வர்த்தகம் மேம்பட்டிருப்பதுடன் அரசு, தனியாரின் மூலதனச் செலவுகள் அதிகரிப்பதையும் ஊக்குவித்திருக்கிறது.

ஜூலை - செப்டம்பர் காலாண்டில், அரசின் செலவினங்கள் 12.4% அதிகரித்தது. மூலதனம் 11% அதிகரித்திருக்கிறது. ஜூன் - அக்டோபர் மாதங்களில் எட்டு முக்கியமான தொழில்களின் உற்பத்தி அதிகரித்திருப்பதால் நகர்ப்புறக் கேட்பு (டிமாண்ட்) இரட்டை இலக்க அதிகரிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இரு சக்கர வாகனங்களின் விற்பனை அதிகரித்து, குறைந்து வந்த டிராக்டர்களின் விற்பனை மீண்டும் மெதுவாக அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. பண்டிகை காலம் காரணமாகவோ என்னவோ இரு சக்கர வாகனங்களின் விற்பனை 20.7%, பயணிகள் வாகனங்களின் விற்பனை 10.3% என்கிற அளவில் அதிகரித்திருப்பதை பொருளாதார வல்லுநர்கள் ஆரோக்கியமான வளர்ச்சியின் அறிகுறியாகப் பார்க்கிறார்கள்.

எஃகுக்கான தேவை 15.3% அதிகரித்திருப்பது தொழில் துறை உற்பத்தி அதிகரித்திருப்பதன் அடையாளம். சிமெண்ட் உற்பத்தி (17.1%), மூலதனப் பொருள்கள் இறக்குமதி (9.4%) இரண்டும் அக்டோபர் மாதத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியின் வெளிப்பாடுகள். வர்த்தகத்தில் இந்தியாவின் ஏற்றுமதி 6.1% அதிகரித்து 33.5 பில்லியன் டாலராக உயர்ந்தது என்றால், இறக்குமதி 9.6% அதிகரித்து 63.5 பில்லியன் டாலர் அளவை அக்டோபர் மாதம் எட்டியது. சேவைத் துறையின் ஏற்றுமதி 10.8% அதிகரித்திருக்கிறது. இவையெல்லாம் இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் அறிகுறிகள்.

உலகளாவிய நிலையில் ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களுடன் ஒப்பிடும்போதுதான், இரண்டு போர்களாலும் தடம்புரண்டு கிடக்கும் சர்வதேசப் பொருளாதாரச் சூழலிலும் இந்தியப் பொருளாதாரம் நிலைகுலையாமல் இருப்பதை உணர முடியும். ஐரோப்பிய யூனியன் தேக்க நிலையை அல்ல, பொருளாதாரப் பின்னடைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டமைப்பின் வளர்ச்சி 1.2% அளவில் தேக்கம் அடைந்திருக்கிறது.

உலகளாவிய நிலையில் ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களுடன் ஒப்பிடும்போதுதான், இரண்டு போர்களாலும் தடம்புரண்டு கிடக்கும் சர்வதேசப் பொருளாதாரச் சூழலிலும் இந்தியப் பொருளாதாரம் நிலைகுலையாமல் இருப்பதை உணர முடியும். ஐரோப்பிய யூனியன் தேக்க நிலையை அல்ல, பொருளாதாரப் பின்னடைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டமைப்பின் வளர்ச்சி 1.2% அளவில் தேக்கம் அடைந்திருக்கிறது.

ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணர் ஃபிலிப் லேன் கருத்துப்படி, பல நாடுகள் 1999 நிலையை விட பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. பல பொருளாதாரச் சீர்திருத்தங்களை வேறு வழியில்லாமல் ரத்து செய்து மேலும் பின்னடைவை எதிர்கொள்ளும் நிலைக்கு அவை தள்ளப்பட்டிருப்பதாக ஃபிலிப் லேன் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

பொருளாதாரத் தேக்கத்தின் பாதிப்புகளும் விளைவுகளும் அங்கே வெளியில் தெரிய ஆரம்பித்திருக்கின்றன. ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளில் வேலைநிறுத்தங்களும், மக்கள் போராட்டங்களும் தொடங்கியிருக்கின்றன. ஜெர்மனியில் இந்த ஆண்டில் மட்டும் நான்கு முறை ரயில் ஓட்டுநர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம், கிரீஸ் உள்ளிட்ட நாடுகளில் அவ்வப்போது ஏற்பட்ட விமான நிலைய வேலைநிறுத்தங்களால் ஐரோப்பியர்களின் பயணத் திட்டங்கள் பாதிக்கப்பட்டதுடன், விமான சேவைத் துறையும் பெரிய இழப்பை எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது.

பொருளாதாரத்தின் தாக்கம் அரசியலில் பிரதிபலிக்கிறது. ஒரு காலத்தில் பல நாடுகளை இயற்கை வளங்களுக்காகக் காலனியாக்கி தங்களது வளர்ச்சிக்காகத் தொழிலாளர்களை அடிமைகளாக பயன்படுத்திய நாடுகளில் எல்லாம் குடியேற்றத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடங்கியிருக்கின்றன.

ஜெர்மனி, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், ஸ்வீடன், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் தங்களது பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்ள அடிமைத் தொழிலாளர்களை அழைத்து வந்தன. இப்போது அந்த நாடுகள் அனைத்துமே தங்களது பொருளாதாரத்தை தக்க வைத்துக்கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், இலங்கை, மாலத்தீவு ஆகிய நாடுகளின் பொருளாதார நிலையும், சீனாவில் காணப்படும் வளர்ச்சிப் பின்னடைவும் பொருளாதார நிபுணர்கள் இந்தியாவை நம்பிக்கையுடன் பார்ப்பதற்குக் காரணங்கள். ஒருபுறம் விலைவாசி உயர்வும், வேலையின்மையும் காணப்பட்டாலும்கூட, இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளம் வலுவாகவே காணப்படுவது ஆறுதலை மட்டுமல்ல, வருங்காலம் குறித்த நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.